[1975 அக்டோபர் 28

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** (அ) ஆறுயிரத்து எண்பது பேர்.

(இ) ஆண்களுக்கானக் கருத்தடை அறுவை சிகிச்சை செய்து கொண்டவர்களின் புள்ளிவிவரங்கள் சமய வாரியாக வருமாறு :—

| | |
|---|---|
| இந்து சமயத்தைச் சேர்ந்தவர்கள் | 5,340 |
| இஸ்லாமிய சமயத்தைச் சேர்ந்தவர்கள் | 316 |
| கிருத்துவ சமயத்தைச் சேர்ந்தவர்கள் | 424 |
| மொத்தம் | 6,080 |

## *Drugs Stores*

* 93 *Q.*—Thiru B. VENKATASWAMY : Will the Hon. the Minister for Health be pleased to state :

(*a*) whether there are proposals under the consideration of the Government to require Drugs Stores being kept open during nights also; and

(*b*) if so, the details thereof ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** (அ) ஆம்.

(இ) இம்மாநிலத்தில் இரவு-பகல் எந்நேரமும் மருந்து விற்பனையையும் மருந்தாக்குதல் பணியையும் செய்து வந்த சில மருந்துக் கடைகள் இந்திய அரசு பிறப்பித்த 1970 ஆம் ஆண்டு மருந்துப் பொருள் கட்டுப்பாட்டு ஆணையின் மூலம் அனுமதித்த குறைந்தளவு ஆதாயத் தொகை காரணமாக அப்பணியை நிறுத்திவிட்டன. கூடுதல் பணியாளர்களை நியமிப்பதன் மூலம் இரவு நேரத்தில் மருந்து விற்பனை செய்வதற்காக மருந்தாக்குநர்களுக்கு ஊக்கத் தொகை அளிப்பது குறித்து இந்திய மருந்துப்பொருள் கட்டுப்பாட்டு அதிகாரி ஆய்வு செய்தார். எனினும், அது கைவிடப்பட்டது. முறைமாற்றுப் பணியில் மருந்தாக்குநர்களை நியமிப்பதன் மூலம் ஆதாயம் உள்ள முறையில் இப்பணியை நடத்த இயலும் வகையில், இரவு நேரத்தில் மருந்துப் பொருட்களை விற்பனை செய்யும் மருந்துக் கடைகளுக்கு, கடைகள் நிறுவனங்கள் சட்டத்தின் விதித் துறைகளிலிருந்து விலக்களிக்க வேண்டும் என்று மருந்துப்

*1975 அக்டோபர் 28]*

பொருள் கட்டுப்பாட்டு அதிகாரி தெரிவித்த கருத்துரை தொழிலாளர் நல ஆணையாளரைக் கலந்தாலோசிக்கப்பட்டு வருகிறது.

மருந்துப் பொருட்கள், குழந்தை உணவுகள் ஆகியவற்றை மட்டுமே விற்பனை செய்துவரும் வணிகர்களுக்கு வாராந்திர விடுமுறை பற்றிய விதியினின்றும் ஏற்கெனவே விதி விலக்களிக்கப்பட்டுள்ளது.

THIRU B. VENKATASWAMY : At certain times, medicine are not available during night times. Will the Hon. Minister for Public Health take steps to reduce profits and open more drugs stores to cater to the needs of the people during nights ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவரவர்களே, பெரும்பாலான மருந்துக் கடைகள் வைத்திருப்பவர்கள் தனிப்பட்டவர்கள். அவர்களுக்குக் கிடைக்கிற குறைந்த லாபத்தை வைத்துக்கொண்டு மருந்துகள் விலையை மத்திய அரசு கட்டுப்பாடு செய்திருப்பதால் இரவு நேரங்களில் ஆகிற அதிகச் செலவை தாக்குப்பிடிக்க முடியவில்லை என்று சொல்கிறார்கள். அதைக் கருதிப் பார்க்கும் போது மத்திய அரசு மருந்து விலைக்கட்டுப்பாட்டைச் சிறிது தளர்த்த வேண்டுமென்று கேட்டார்கள். ஆனால் அவர்கள் எந்தவகையிலும் தளர்த்துவது இல்லை என்று சொல்லி விட்டார்கள். அண்மையில் சூப்பர் மார்க்கெட் போன்ற இடங்களில் இரவு நேரங்களில் மருந்துக் கடைகளை வைத்துக் கொள்ளலாம் என்ற செய்தியைப் பார்த்தேன்.

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** தலைவரவர்களே, கோவையிலே சூப்பர் மார்க்கெட்டிலே மருந்துக் கடை வைத்திருக்கிறார்கள். பெரிய நகரங்களிலே, மாவட்டத் தலைநகரங்களிலே கூட்டுறவுக் கடைகள் இருக்குமானால் அவைகள் அல்லது பெரிய கடைகள், சென்னை நகரத்தில் சில பெரிய கடைகள் சாஉறிப் சிங் கடை போல 24 மணி நேரமும் திறந்து வைத்திருக்கிறார்களே, அப்படி அதிக மூலதனம் போட்டு நடத்துகிற கடைகளையாவது 24 மணி நேரம் நடத்த செய்ய அரசு ஆவன செய்யுமா? இந்தப் பெரிய கடைகளுக்குக் கட்டுப்படி ஆகாமல் போகாது. ஆகவே அரசு இதற்கு ஆவன செய்யுமாவென்று அறிய விரும்புகிறேன்.

[1975 அக்டோபர் 28

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவரவர்களே, அவர் களிடத்தில் கலந்து பேசியதில் மருந்துக்கு ஒரு சிறு கட்டண உயர்வுக்கு அனுமதிக்க வேண்டுமென்று கேட்டார்கள். அதைச் சட்டப்படி ஏற்றுக்கொள்ள முடியவில்லை. இரவு நேரத்தில் பணியாற்றுகிறவர்களுக்குப் பணி செய்கிறவர்கள் சட்டம் இருக் கிறதே, அதில் சில தடைகள் இருக்கின்றன. இதைப் பற்றி லேபர் கமிஷனர் அவர்களுக்குத் தெரிவித்து இதற்கு விதி விலக்கு அளிக்குமாறு கேட்கப்பட்டிருக்கிறது. அது முடிவாகவில்லை. சூப்பர் மார்க்கெட்கள் பொதுமக்களின் நன்மைக்காக நடத்தப்படு கின்றவை. எங்கெங்கே இரவு நேரங்களில் வைக்க வசதி இருக் கிறதோ அந்த இடங்களில் மருந்து விநியோகத்தை மேற் கொள்ள வேண்டுமென்று நானும் இந்த நேரத்தில் ஆலோசனை யாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*Transportation Plan for Coimbatore.*

* 94 Q.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Health be pleased to state :

(*a*) whether the traffic and transportation studies to evolve a suitable transportation plan for Coimbatore have been completed; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** (அ) ஆய்வுகள் இன்னமும் நடந்து வருகின்றன.

(இ) கோயம்புத்தூர் பெருநகர்ப் பகுதிக்கான பயணப் போக்குவரவு, சரக்கேற்றுப் போக்குவரத்து ஆய்வுபற்றிய அடங்கல் திட்டத்தைத் தயாரிப்பதற்கான பல்வேறு ஆய்வுகளை தமிழக அரசு நகர—நாட்டுப்புற அமைப்பு இயக்குநர் அலுவலகத்தைச் சேர்ந்த சிறப்பாய்வுப் பிரிவு ஒன்று நடத்தி வருகிறது. இப்பணிக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட கோயம் புத்தூர் பெருநகரப் பகுதியின் பரப்பு 760.76 சதுர கிலோ மீட்டராகும். இதில் கோயம்புத்தூர், சிங்காநல்லூர் நகராட்சி களும், கோயம்புத்தூர் நகரைச் சுற்றியுள்ள சிறந்த நகர்ப்புறப் பகுதிகளான பெரியநாயக்கன்பாளையம், கணபதி, குறிச்சி, குனியமுத்தூர், மதுக்கரை ஆகியவையும் அடங்கும்.